LIBRARY
11 JUL 1958
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, the 12th February 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Community Development Projects.

* 51 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total amount spent on the Community Development Projects and National Extension Service Schemes up to 1957;

(*b*) the amount advanced as loans to peasants for agricultural purposes in the above areas; and

(*c*) the amount spent towards establishment charges?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Rs. 7,28,13,068 up to 31st March 1957.

(*b*) Rs. 2,21,84,957.

(*c*) Rs. 1,18,40,559.

SRI N. K. PALANISAMI: முக்கியமாக செலவு செய்யப்பட்டிருக்கக்கூடிய தொகையில் நிர்வாகச் செலவிற்கு அதிகப்படியாக செலவு செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. அதனுல் நிர்வாகச் செலவைக் குறைப்பதற்கு ஏதாவது புது முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: மொத்தச் செலவே ஏழு கோடி இருபத்தெட்டு லட்சத்து பதின்மூவாயிரத்து அறுபத்தெட்டு ரூபாய். அதில் நிர்வாகச் செலவிற்கு என்று அதாவது உத்யோகஸ்தர்களுக்கு என்று ஒரு கோடியே பதினெட்டு லட்ச்த்து நாற்பதாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தொன்பது ரூபாயாகும். இதில் சேர்க்கப்பட்ட உத்யோகஸ்தர்கள் யார் என்ருல் அவர்கள் . . . .

One Block Development Officer, two Social Education Organizers, two Extension Officers, one each for Agriculture, Animal Husbandry and Co-operation, one Junior Engineer, one Progress Assistant, ten Grama Sevaks. In addition to the above staff, one Health Inspector, one Industrial Supervisor, two Grama Sevikas, two to four handspinning organizers, Medical Officers where necessary, one Lady Health Officer, four midwives and one compounder also appointed in the Community Development Block.

ஆகவே இதில் அடங்கிய உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் குமாஸ்தாக்கள் மட்டும் அல்ல. அதில் இருக்கக்கூடியவர்கள் தொழிலுக்கு உதவக்கூடியவர்களும் விவசாயத்திற்கு உதவக்கூடியவர்களும், இன்னும்

[12th February 1958

இஞ்சினியர்களும், கல்வியைப் பரப்புவதற்கு உதவிசெய்கின்ற வர்களும் இப்படிப்பட்ட தொழில் உத்தியோகஸ்தர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் அங்கு இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. 100-க்கு 90 பேர்கள் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் தான். அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு செலவு செய்யவேண்டியது அவ சியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள்கூட இல்லாமல் அந்த வேலைகளைச் செய்யமுடியாது என்பது எங்களுடைய அபிப்பிராயம்.

SRI S. LAZAR : இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டம் எந்த நோக்கத் துடன் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் எந்த அளவு நிறைவேறி இருக்கிறதா என்பதைச் சொல்லமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதில் அளவு எடுத்து அந்த அளவுக்குத்தான் நிறைவேறி இருக்கிறது என்று இப்பொழுது அபிப்பிராயம் சொல்லமுடியாது. நேற்றுகூட ஒரு கேள்விக்கு பதில் சொன்னேன், இதற்கு என்று ஒரு கமிட்டியை நியமித்து அதை நிர்ணயம் செய்யவேண்டும் என்று.

SRI K. ANBAZHAGAN : சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் மூலம் விவ சாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன் அவர்களுக்கு காலாகாலத்தில் கொடுக்கப்படுவதில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அத்துடன் சமுதாய வளர்ச்சி திட்டத்தின் மூலம் வேலை செய்வதில் அந்தத் துறையின் இஞ்சி னியர்களுக்கும் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட் துறையிலுள்ள இஞ்சி னியர்களுக்கும் இடையில் சில மாறுபாடுகள் இருப்பதாகத் தெரியவருகிறது. அதனால் பல காரியங்கள் நடைபெறாமல் தடைப்படுகின்றன. அதை நிவர்த் திக்க ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என் பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் இரண்டு கேள்விகள் அடங்கி இருக்கின்றன. முதல் கேள்வி விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் விஷ யத்தைப்பற்றி. விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் விஷயமாக கால தாமதம் ஏற்படுகிறது என்பது வாஸ்தவம்தான். சில இடங்களில் சரியான காலங் களில் கடன்கள் விநியோகம் செய்யப்படவில்லை என்ற புகார் இருப்பது தெரியும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. இரண்டாவது கேள்விக்கு பதில் சொல்வதற்கு [இப்பொழுது அது ஞாபகத்தில் இல்லை, மறுபடியும் கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI K. ANBAZHAGAN : சமுதாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் [வேலை செய்யக்கூடிய இஞ்சினியர்களுக்கும் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண் டின் கீழ் வேலை செய்யக்கூடிய இஞ்சினியர்களுக்கும் தங்களுடைய கட மைகளைச் நிறைவேற்றுவதில் தடையாக பல மாறுபட்ட கருத்துக்கள் வருகின்றன. அதை நிவர்த்தி செய்வதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம். அப்படி முரண்பாடு வருவது தெரியும். அப்படி முரண்பாடு இல்லாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : ஒரு கோடி பதினெட்டு லட்சம் சொச்சம் ரூபாய் நிர்வாகச் செலவிற்கு செலவு செய்யப்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டது. டிவிஷனல் இஞ்சினியர்கள், சுகாதார ஆபீசர்கள் முதலியவர்கள் சம்பளம் முதலியவை இதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இவர்கள் எல்லோரையும்தான் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே பதில் சொல்லும் போது சொல்லியிருக்கிறேன்.

12th February 1958]

SRI A. GOVINDASAMY : சமுதாய நல அபிவிருத்தி திட்டங்கள் மூலமும், தேசீய அபிவிருத்தி திட்டங்கள் மூலமும் மற்ற மாகாணங்களில் அபிவிருத்தி அடைந்திருக்கிற அளவுக்கு சென்னை மாகாணத்தில் அபிவிருத்தி அடையவில்லை என்ற தகவல் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்களே அபிவிருத்தி பகுதிகளுக்குச் சென்று அவைகளைப் பார்வையிட்டிருக்கிறார். எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று அவர்தான் சொல்லவேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் நல்ல அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றுதான் சொல்லுகிறார்கள். அப்படியேதான் நானும் கேள்விப்பட்டேன். ஒரு சில இடங்களில் அப்படி அபிவிருத்தி அடையாமல் இருந்திருக்கலாம். ஆனால் ரிப்போர்ட்டை படித்துப் பார்த்தால் நல்ல அபிவிருத்தி அடைந்திருப்பதாகவும் சில இடங்களில் அப்படி இல்லை என்றும் தெரிய வருகிறது. சில இடங்கள் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று கூட சொல்லலாம். அது என்னுடைய அபிப்பிராயம்.

SRI N. MARUDACHALAM : அங்கு உத்தியோகஸ்தர்களை நியமித்ததில் ஹரிஜனங்கள் எவ்வளவு பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது இருப்பது ரூபாய் கணக்கு தான், ஹரிஜனக் கணக்கு இப்பொழுது என்னிடம் இல்லை. அதனால் அதைப்பற்றி இப்பொழுது சொல்லமுடியாது.

SRI M. P. SUBRAMANIAM : ஏழு கோடி ரூபாய் சொச்சம் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அவற்றில் மக்கள் சார்பாக எவ்வளவு கொடுக்கப்பட்டது, ஸ்தல ஸ்தாபனங்கள் மூலமாக எவ்வளவு கொடுக்கப்பட்டது ? அல்லது இந்த ஏழு கோடி ரூபாயும் அரசாங்கம் நேரடியாக செலவுசெய்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அரசாங்கத்திலிருந்து தான் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்ட் செலவுசெய்த பூராப் பணமும் கணக்கில் இருக்கிறது.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் கொடுக்கக்கூடிய கடன் தொகைகள் எல்லாம் விவசாயிகளுக்குப் போய்ச்சேருவதில்லை. அவர்கள் ஜாமின் கட்டவேண்டும் என்று சொல்வதனால் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. பணக்காரர்களாக இருக்கக்கூடியவர்கள்தான் அதை வாங்கிக் கொள்ளுகிறார்கள். பணக்காரர்களுடைய கைக்குத்தான் அது போய் சேருகிறது என்று சொல்லப்படுகிறது. சாதாரணமாக . . .

MR. SPEAKER : The hon. Member must ask the question. Instead he is going on making a statement.

SRI N. K. PALANISAMI : மிராசுதார்கள் அம்மோனியம் சல்பேட் முதலியவைகளை பணம் கொடுத்து வாங்கி அவைகளை விற்று வருவதாக தெரியவருகிறது. ஆகவே சாதாரண விவசாயிகளுக்கு அவைகள் கிடைக்கும்படியான ஒரு ஏற்பாட்டை சர்க்கார் அவர்கள் செய்வார்களா ? என்பதை அறிய விரும்புகிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய முறையை மாற்றியமைக்க முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Many suggestions for action are put in the form of questions. I do not think it will be possible to answer these questions.

MR. SPEAKER : I appealed to hon. Members not to give information but only put questions. If they do not do that, the only remedy is not to call them when they stand up.

[12th February 1958

SRI A. GOVINDASAMY : இந்த திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு கிராம சேவக்குகள் அதிகமாக வேலை செய்கிறார்கள் என்று நான் பல பிளாக்குகளை பார்வையிட்டபோது தெரிந்துகொண்டேன். நான் ஐந்தாறு பிளாக்குகளை பார்வையிட்டபோது அது தெரியவந்தது. இப்படி அவர்கள் அதிகப்படியாக வேலை செய்கிறோம் என்று ப்ளாக் ஆபீஸர்களின் முன்னிலையிலேயே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கவேண்டிய ரிப்போர்ட்டுகளும் அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதனால் அவர்களுக்கு அதிகப்படியான சம்பளத்தைக் கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ? மற்றும் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் போலுள்ளவர்களின் வேலைகளேயும் அவர்கள் செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆகவே அந்த ஆபீசர்களை தகுந்த அளவிற்குக் குறைத்து கிராம சேவக்குகளுக்கு அதிகப்படியான சம்பளத்தைக் கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி எஸ்டிமேட் கமிட்டி விசாரித்து சிபாரிசு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களும் பல இடங்களை பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் என்ன சிபாரிசு செய்கிறார்கள் என்பதைப் பார்த்து அதன்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. அவர்கள் சிபாரிசு செய்வதில் எது நியாயம் என்பதை அறிந்து அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : முதல் ஐந்தாண்டு திட்டம் சம்பந்தமாக என்ன வேலைகள் நடைபெற்றன என்று ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பற்றியும் ரிப்போர்ட்டு சமர்ப்பிக்கப்பட்டது. அது போன்று இதற்கும் செய்யமுடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பல அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அங்கத்தினர் மட்டும் கொஞ்சம் அக்கறை எடுத்துக் கொண்டால் எவ்வளவோ அறிக்கைகளை படிக்கமுடியும். அவர்தான் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். அறிக்கைகளுக்குக் குறைவு இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. LAZAR : ஒவ்வொரு சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக கொடுக்கப்படவேண்டிய கடன் பட்டுவாடா செய்யப்படாமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? விவசாயிகளுக்கு standing crops மீது கடன் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கடன் மூலம் எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்று 'பி' பகுதிக்கு பதில் சொல்லும்போது பதில் சொல்லியிருக்கிறேன் ; அதாவது இரண்டு கோடியே இருபத்தேழு லட்சத்து எண்பத்திநாலாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தேழு ரூபாய் என்று சொல்லியிருக்கிறேன். இப்படி புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கும்போது கடன் கொடுக்கப்படவில்லை என்று சொல்வதை ஒப்புக் கொள்ள முடியாது.

SRI V. SUBBIAH : சமுதாய திட்டங்கள் மூலமாக பில்கள் கலெக்டரிடம் போனால் அவை சாங்கிஷன் செய்வதில் கால தாமதம் ஆகிறது. ஏனென்றால், அவர்களுக்கு அவ்வளவு ஜோலி இருக்கிறது. ஆகவே வேலை ஜல்தியாக இருப்பதால் ஒரு ஸ்பெஷல் ஆபீசரை நியமித்து அவைகளை ஜல்தியாக செய்வதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ? அதற்கு ஏதாகிலும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினருக்கு நான் சமர்ப்பித்துக் கொள்வது என்னவென்றால் கேள்விகளைப் போட்டால் அதற்கு உடனடியாக புள்ளி விவரங்கள் கொடுத்து பதில் சொல்லவேண்டும். அப்படி புள்ளி விவரங்கள் இருந்தால் தான் பதில் சொல்ல முடியும். சமுதாய நலத் திட்டம் சம்பந்தமாக எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியாது. ஒருக்கால் ஞாபகத்தில் வேண்டுமானால் சொல்லலாம்.

12th February 1958]

அது சரியாக இருந்தாலும் இருக்கும், தவறாக இருந்தாலும் இருக்கும். ஆகவே இதைப்பற்றி நான் பதில் சொல்வதற்கு தயாராக இல்லை, சரியான பதில் இருந்தால் தான் பதில் சொல்லமுடியும்.

Sri M. K. SOMASUNDARAM : ப்ளாக் டெவலெப்மெண்ட் ஏரியாவுக்குள்ளே மடத்திற்குச் சொந்தமான இடங்களில் அபிவிருத்தி செய்ய முடியாது என்று ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீசர்கள் சொல்லுகிறார்கள். மடத்திற்குரிய இடத்தை அபிவிருத்தி செய்வதற்காக ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீசரிடம் மாற்றிக்கொடுக்க முடியுமா என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு முன் சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

Sri A. VEDARATHNAM PILLAI : அரசாங்கம் ஏழு கோடி ரூபாய் செலவு செய்திருக்குமானால், அதற்குத் தகுந்த அளவிலே கிராமவாசிகளின் பகுதியையும் ஓரளவு கொடுத்திருக்கவேண்டும். ஜில்லா போர்டுகளும் ஓரளவு அவர்கள் பகுதியைக் கொடுத்திருக்கவேண்டும். அந்தத் தொகை எவ்வளவு என்று கூற முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : : அந்தப் புள்ளி விவரங்கள் இப்பொழுது என் கையில் இல்லை.

* 52 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : Will the Hon. the Chief Minister be pleased to state when a Community Development Programme will be started in the Chengam taluk? 8-40 a.m.

The Hon. Sri C. SUBRAMANIAM : It cannot categorically be stated now as to when exactly the Community Development Programme will be extended to this taluk; but it may be any time before the end of the Second Plan, according to the programme as at present phased.

Special Officer in the Agriculture Department

* 53 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any Special Officer has been appointed to enquire into the working of the Agriculture Department for improving its machinery and the tractor organization; and

(*b*) if so, whether he has submitted his recommendations?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes.

Sri N. K. PALANISAMI : அவர்கள் சமர்பித்த யாதாஸ்தின் விவரங்களைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதிலே கண்ட சிபார்சுகள் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. பரிசீலனை செய்யப்பட்ட விஷயங்களில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டும் வருகிறது. பரிபூரணமாக முடிவு செய்ததும் கனம் அங்கத்தினர் அவர்கள் மறுபடியும் ஒரு கேள்வி கேட்டால், இதை முற்றிலும் இந்த டேபிளிலே வைக்கலாம்.